www.Padasalai.Net www.CBSEtips.in

# இந்திய அரசாங்கம்
## வருமானவரித்துறை
## வருமானவரித்துறை அதிகாரி அலுவலகம்,
## TDS வார்டு, வேலூர்
## எண் .2, பார்ரக்ஸ் கிராஸ் தெரு, ஆபிசர்ஸ் லைன்,
## வேலூர் - 632001. மின்னஞ்சல்: vellore.ito.tds@incometax.gov.in

TDS e-filing/TDS Ward, VELLORE/2023-24(157) Date:16.08.2023

பெறுநர்,

சம்பளபட்டுவாடா அதிகாரி/ DDO,
ASST ELEMENTARY EDUCATION OFFICE SHOLINGHUR,

AEEO OFFICE SHOLINGHUR BDO OFFICE

CAMPUS CHITTUR ROAD SHOLINGHUR

VELLORE - 631102.

ஐயா / அம்மையீர் ,

பொருள்: வருமானவரி பிடித்தம் (TDS) - பிடித்து படிவங்கள் தாக்கல் செய்வது தொடர்பாக (e-filing) – TAN: CHEA15844D – சார்பு.

*******

வணக்கம்,

1. சம்பளம்பெறும் ஊழியர்கள் TDS மூலமாகவே வரியை செலுத்தவேண்டும். Advance Tax மூலமாக செலுத்தகூடாது. ஆகையால் சம்பளபட்டுவாடா அதிகாரிகள் இதனை ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி அறிவுறுத்தவேண்டும். அவர்களாகவே தங்களின் PAN எண்ணில் நேரடியாக வரிசெலுத்தகூடாது.

2. கடந்தநிதி ஆண்டு 2022-23-யில் வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் TDS விழிப்புணர்வு கூட்டங்களை வருமானவரிதுறை (TDS Ward), வேலூர்,

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

நடத்தியது. அக்கூட்டங்களில் நடந்த உரையாடலில் கீழ்க்கண்ட குறைகள் / விதிமீறல்கள் கண்டறியப்பட்டது:

- ஊழியர்கள் TDS மூலம் வருமானவரி செலுத்தாமல் அவர்களாகவே நேரடியாக Advance Tax மூலம் PAN-யில் வரிசெலுத்தியது தெரியவந்துள்ளது.
- சம்பளபட்டுவாடா அதிகாரிகள் TDS மூலம் வரியை வசூல் செய்து அதன் விவரத்தை Form 24Q என்ற படிவத்தின் மூலம் ஒவ்வொரு காலாண்டுக்கும் e-TDS Return தாக்கல் செய்வதில்லை. இதனால் TDS மூலம் பிடிக்கப்பட்ட வரி ஊழியர்களின் வருமானவரிகணக்கில் சேர்வதில்லை.

மேற்கூறியகுறைகள் / விதிமீறல்களை சரிசெய்ய சம்பளபட்டுவாடா அதிகாரிகள் என்ன செய்யவேண்டும் என்பதை கீழேகுறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தயவுகூர்ந்து பின்பற்றும்படி கேட்டுகொள்ளப்படுகிறது.

**3.சம்பளபட்டுவாடா அதிகாரியின் கடமைகள்:-**

(i) ஒவ்வொரு ஆண்டும், ஆண்டின் தொடக்கத்திலேயே சம்பளபட்டுவாடா அதிகாரியானவர் தனது ஊழியருக்கு அளிக்கபோகும் சம்பளம், இதரசலுகைகள் இவற்றை கணக்கிட்டுகொண்டு ஆண்டு நிகரவருமானத்தை உத்தேசமாக கணக்கிட்டு அதற்கான வருமானவரியை அறிந்து, **u/s192** இந்திய வருமானவரி சட்டம் 1961-ன் படி அதை 12ஆல் வகுத்து (மாதசம்பளம் எனில்) கிடைக்கும் தொகையை ஒவ்வொரு மாதசம்பளத்தில் இருந்தும் பிடித்தம் செய்யவேண்டும். அவ்வாறு வருமானவரியை பிடிக்கத் தவறினால் இந்திய வருமான வரி சட்ட **பிரிவு 201** மற்றும் **221ன்** படி அவர் "**கடமைதவறியஅதிகாரி**" அங்ஙனம் "**deemed to be assesee in default**" என்று கருதப்பட்டு அங்ஙனம் பிடிக்க வேண்டிய வருமான வரி தொகைக்கு மாதம் **1%** வீதம் வட்டி கணக்கிட்டு அவ்வட்டியினை சம்பள

www.Padasalai.Net www.CBSEtips.in

பட்டுவாடா அதிகாரியே தனது சொந்த செலவில் வருமானவரித்துறைக்கு செலுத்தவேண்டும்.

(ii) இங்ஙனம் வட்டி செலுத்த வேண்டியது வருமான வரிச் சட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி பிரிவு **271C**ன் படி ஊழியர் தனக்கு எவ்வளவு வரி கட்டவேண்டுமோ அதற்கு சமமான தொகையினை அபராததொகையாக சம்பளபட்டுவாடா அதிகாரியின் சொந்தசெலவில் இருந்து வருமானவரித்துறைக்கு செலுத்தவேண்டும்.

(iii) மேலும் இந்திய வருமானவரிச் சட்டப்பிரிவு **276B**ன் படி இங்ஙனம் வரிப்பிடித்தம் செய்யது வரிபிடித்தம் செய்த தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த தவறினால் 3 மாதம் முதல் 7 வருடங்கள் வரை சிறைதண்டனையும் கிடைக்கலாம்.

(iv) சம்பளபட்டுவாடா அதிகாரி பிரிவு **200(3)**ன் படி தான் எந்த ஊழியருக்கு எவ்வளவு வரி பிடித்தம் செய்திருக்கிறோம் என்பதனை Form 24Q என்ற படிவத்தின் மூலம் ஒவ்வொரு காலாண்டுக்கும் e-TDS Return தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்தால் மட்டுமே ஊழியர்களுக்கான வருமான வரிகணக்கில் அதுசேரும். அவ்வாறு தாக்கல்செய்வதற்கு கருவூலத்திலிருந்து BIN Number மற்றும் DDO Serial Number-யை பெறவேண்டும்.

**e-TDS தாக்கல்செய்வதற்கானகாலக்கெடு:**

| **Quarter** | **For Quarter ending** | **Due date** |
|---|---|---|
| Q1 | 30th June | 31st July |
| Q2 | 30th Sept | 31st Oct |
| Q3 | 31st Dec | 31st Jan |
| Q4 | 31st March | 31st May |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

(v) அங்ஙனம் 4 காலாண்டுக்கும் தாக்கல் செய்த பிறகு ஊழியர்களுக்கு படிவம் 16-யை (Form 16) வருமானவரித்துறை வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து வழங்கவேண்டும். இதுவே அவர்களுக்கு வழங்கப்படும் வருமானவரி பிடித்த சான்றிதழ் ஆகும்.

(vi) அவ்வாறு ஒவ்வொரு காலாண்டுக்கும் சம்பளபட்டுவாடா அதிகாரி e-TDS Returnயை காலக்கெடு தாண்டி தாக்கல் செய்தால் பிரிவு **234E**-ன் படி தவணைதேதியிலிருந்து நாளொன்றுக்கு ரூ.200/- அபராதம் விதிக்கப்படும். ஒருவேளை தாக்கலே செய்யவில்லை யென்றால் பிரிவு **271H-ன்** படி குறைந்தபட்சம் ரூ.10,000/-ல் இருந்து ரூ.1,00,000/- வரை அபராதமாக செலுத்தநேரிடும்.

4. மேற்கூறிய விவரங்களை தங்களது ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி உரிய நேரத்தில் TDS வரியை பிடித்தம் செய்து அரசாங்கத்திற்கு செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

தங்கள் நன்றியுள்ள,

Dayaram K

தயாராம் குமார்,
வருமானவரித்துறை அதிகாரி,
TDS வார்டு, வேலூர்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com